## ABSTRACT

Schemes – State Scheme – Namakku Naame Thittam (NNT) – Implementation of Scheme for the year 2021-2022 – Administrative Sanction and release of Fund - Guidelines for the year 2021-2022 prescribed – Orders – Issued.

---

**Rural Development and Panchayat Raj (SGS.1) Department**

**G.O.(Ms.) No.147** **Dated: 14.12.2021**

**பிலவ-கார்த்திகை-28ந்தேதி**

**திருவள்ளுவர் ஆண்டு-2052**

**Read:**

(1) G.O.(Ms) No.112, Rural Development and Panchayat Raj (IRD-1) Department, dated 01.06.1998.

(2) From the Director of Rural Development and Panchayat Raj, Letter No. 35286 /2021/SSS.1, dated 15.9.2021.

-----

**ORDER:**

The Namakku Naame Thittam is a participatory demand driven scheme which was introduced in Tamil Nadu during 1997-1998 to promote and strengthen the Self Help and Self-reliant attitude of the community. Guidelines for the implementation of this scheme were issued in the Government Order first read above. The scheme involves the community directly in the developmental process from planning stage through resource mobilization, execution to the maintenance stage. State Government financial support supplements the efforts of the community besides technical support. This Scheme gives enough scope for covering all the felt needs of the public.

2. The Namakku Naame Thittam introduced during 1997-1998 was in vogue till 2000-2001. This Scheme was implemented with a different name Village Self Sufficiency Scheme in 2001-2002 and was renamed as Self Sufficiency Scheme on 17.7.2002 and implemented till 2005-2006. Namakku Naame Thittam had been revived during 2007-2008 and continued till 2010-2011.

3. In the Letter second read above, the Director of Rural Development and Panchayat Raj has sent a proposal for sanction of necessary funds along with Draft Guidelines for the implementation of the Scheme during the year 2021-2022.

4. The Government have carefully examined the proposal of the Director of Rural Development and Panchayat Raj for implementation of the Namakku Naame Thittam for the year 2021-2022 in detail and decided to accept the same and issue the following orders:-

(i) Administrative Sanction is accorded for a sum of Rs.100.00 Crore (Rupees Hundred Crore only) and sanction is accorded for the release of Rs.50.00 Crore (Rupees Fifty Crore only) for implementation of the Namakku Naame Thittam for the year 2021-2022. Release of funds be made / restricted based on the immediate requirement. The balance release will be considered based on the progress of the works;

(ii) Detailed Guidelines both in English and Tamil for implementation of the Namakku Naame Thittam for the year 2021-2022 are annexed to this order.

5. The amount sanctioned in para 4(i) above, shall be debited to the following Head of Account:-

2515-00-Other Rural Development Programmes – 102-Community Development – State's Expenditure – AU - Implementation of Namakku Naame Thittam 309-Grants-in- Aid – 03 - Grants for Specific Schemes.
(DPC 2515-00-102-AU-30903)

6. The Director of Rural Development and Panchayat Raj is authorized to draw the amount sanctioned in para 4(i) above and disburse the same to the Districts and send the progress report on the implementation of the Namakku Naame Thittam for the year 2021-2022, to the Government.

7. This order issues with the concurrence of Finance Department vide its U.O. No.53832/Fin(RD)/2021, dated 14.12.2021.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**P.AMUDHA**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**To**
The Director of Rural Development and Panchayat Raj, Chennai-15.
All District Collectors (except Chennai) (through the Director of Rural Development and Panchayat Raj, Chennai-15).
All Project Directors, District Rural Development Agencies (through the Director of Rural Development and Panchayat Raj, Chennai-15).
The Commissioner of Treasuries and Accounts, Chennai-35.
The Principal Accountant General, Chennai - 9/18/35.
The Pay and Accounts Officer(Secretariat), Chennai-9.
The Pay and Accounts Officer(East), Chennai-8.
The Pay and Accounts Officer(North), Chennai-1.
The Pay and Accounts Officer(South), Chennai-35.
The Pay and Accounts Officer, Madurai.
All District Treasury Officers.
The National Informatics Centre, Chennai-9.

**Copy to**
Hon'ble Chief Minister's Office, Chennai-9.
The Special Personal Assistant to Hon'ble Minister for Rural Development, Chennai-9.
The Private Secretary to Chief Secretary to Government, Chennai-9.
The Principal Private Secretary to Principal Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, Chennai –9.
Finance (BG-I/BG-II/RD) Department, Chennai – 9.

**// FORWARDED BY ORDER //**

(R.Geetha)
**Under Secretary to Government**

# G.O. (Ms) No.147, RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ (SGS.1) DEPARTMENT, DATED 14.12.2021

## ANNEXURE

## Guidelines for implementation of Namakku Naame Thittam (NNT) for the year 2021-2022 (only in Rural Areas)

### 1. Introduction

Namakku Naame Thittam (NNT) is a participatory demand driven scheme announced by Dr.Kalaignar M.Karunanidhi, Hon'ble former Chief Minister of Tamil Nadu during 1997-1998 Budget Speech to promote and strengthen the Self Help and Self-reliant attitude of the community and guidelines for the implementation of this scheme were issued in G.O.(Ms.) No.112, Rural Development (IRD-1) Department, dated: 01.06.1998. The Scheme involves the community directly in the developmental process from planning stage through resource mobilization, execution to the maintenance stage. State Government financial support supplements the efforts of the community besides technical support. This Scheme gives enough scope for covering all the felt needs of the public.

Namakku Naame Thittam (NNT) introduced during 1997-1998 was in vogue till 2000-2001. This Scheme was implemented with a different name Village Self Sufficiency Scheme in 2001-2002 and was renamed as Self Sufficiency Scheme on 17.7.2002 and implemented till 2005-2006. Namakku Naame Thittam had been revived during 2007-2008 and continued till 2010-2011. From 2021-2022 onwards Namakku Naame Thittam (NNT) is again implemented with the following guidelines only in rural areas.

### 2. Public participation:

The minimum public contribution for any of the identified works should be atleast one-third of the estimate amount for the work.

### 3. Procedure for selection of works under Namakku Naame Thittam

i. The need for taking up of works under Namakku Naame Thittam may originate from the Community. In this context, the word 'Community' means individuals, groups, institutions like registered societies and trust, public or private companies.

ii. Request in the form of an application indicating the works to be taken up with consent and for contributing one-third of the amount by the public has to be given to the District Collector.

iii. Works should only be taken up in rural areas.

iv. The District Collector shall ascertain the actual need and feasibility of the work to be taken up with reference to the norms of the scheme. After justifying the need, the District Collector will call for the detailed estimates from the implementing agency. Administrative Sanction shall be given only on realization of public contribution amount in NNT bank account. The applicant has to deposit the prescribed amount by means of Demand Draft to the District Collector or Project Director, District Rural Development Agency.

v. The contributions given by the Local Bodies and Universities shall not be accepted under this scheme.

vi. Corporate Social Responsibility (CSR) funds of State Public Sector Undertakings (SPSUs) shall not be accepted as Public Contribution under this Scheme.

vii. If permission of the Local Body or the Department concerned is necessary to execute the work, the District Collector shall obtain the above permission before according administrative sanction.

viii. If the assets to be created have to be maintained by the Local Body/Department, the District Collector should obtain the concurrence from the Local Body / Department concerned.

ix. If requests are received for various works but amount available is limited under the scheme, the District Collector shall give priority for the works which are of maximum benefit to the community.

x. Director of Rural Development and Panchayat Raj may also receive major contribution from public or private companies except State Public Sector Undertakings (SPSUs) for specific projects.

**4. Suggested List of Works that may be taken up only in Rural Areas**

The following works may be taken up under Namakku Naame Thittam only in rural areas for the year 2021-2022.

i. Construction of Buildings, Smart class rooms, Laboratories, Toilets, Cycle stands and Compound walls/fencing to Government Schools, Adi Dravidar and Tribal Welfare Schools, Panchayat Union Schools and Kallar Reclamation Schools, Government Colleges and Government Hostels, School assembly stage in Government schools with semi-open type design with roofing, Indoor auditorium for Government Schools, Government Polytechnic Colleges and Government Colleges.

ii. Construction of Community Hall, Kitchen and Dining Hall or only Kitchen and Dining where Community Hall has already been constructed.

iii. Construction of Buildings for working Women Hostels run by Government.

iv. Installation of low mass lights with energy efficient lamps at important public places and junctions in rural and peri-urban villages.

v. Provision for gassifier at crematorium.

vi. Provision of Badminton / Basketball court in Government High / Higher Secondary Schools.

vii. Construction of Buildings, Compound walls and fencing to Government Hospitals, Primary Health Centres, Health Sub-Centres, Veterinary Dispensaries, Livestock Centres and Libraries. Construction of Compound walls and other common facilities in Burial grounds including the Burial grounds belonging to Public Wakfs in rural areas, registered with Tamil Nadu Wakf Board may also be taken up.

viii. Construction of Libraries in Rural areas, Noon Meal Centres, Anganwadis, School Kitchen Sheds and Public Distribution Shops in rural areas. Wherever construction of Libraries is undertaken it should be ensured that adequate contribution has been made for the procurement of books.

ix. Creating community assets like Community Buildings, Drinking Water Supply, Cement concrete roads and threshing floors in rural areas.

x. Construction of Bridges, Culverts, upgradation of gravel / WBM roads to BT standard, renewal of worn out BT roads, improvement of Streets and Lanes with paving stones, paver block or cement concrete pavement.

xi. Formation and improvement of Parks, Play Grounds, Traffic Islands, Fountains.

xii. Purchase of Furniture, Computers and accessories for Government Schools and Panchayat Union Schools, Libraries and Buildings under usage of the public. Old Computers and Accessories should not be purchased.

xiii. Solid and Liquid Waste Management works and works related to improve Environmental hygiene.

xiv. Construction of Building for Physical Fitness Centre / Gymnasium along with purchase of required equipments which will be the asset of concerned Local Body.

## 5. Conditions stipulated

The suggested list of permissible works may be taken up subject to the following conditions:-

a. No permanent structure should be constructed without prior permission of the owner of the property.

b. No rights can be claimed by the contributing person / entity over the property / use of property / maintenance of property.

c. The contributors who execute the work may display their names in the name board at the place of execution of the work with the prior permission of the District Collector. The name of the scheme Namakku Naame Thittam should be displayed in not less than two-third of the size of the name board. The name board may be permitted to be put up by the contributors in such a manner that it does not affect the aesthetic value of the building / site. However, the contributors should not claim any right of use or lease over the property directly and its maintenance.

d. If the District Collector feels that the contributors have not shown any interest in the work or in case of violation of any of the prescribed conditions, the order issued for execution or maintenance of the work shall be cancelled and the work will not be permitted to continue.

## 6. Negative List / Prohibited Works

The following works under the Negative List (Prohibited Works) cannot be taken up under the Namakku Naame Thittam unless specifically included in the exceptions:-

1) Construction of Office and residential Buildings belonging to Central and State Governments, including Public Sector Undertakings and Co-operative Societies.

**Exception:**

(i) Construction, Repair and Renovation of residential units of Primary Health Centres, Construction of Buildings, Compound walls for all types of Government Hospitals, Primary Health Centres and Government Veterinary Hospitals, construction of Public Distribution Shops, Direct Procurement Centres, Milk Producers' Co-operative Societies and Bulk Chilling Centres can however be taken up.

2) Purchase of all movable items, equipments and furniture.

**Exception:**

(i) Purchase of furniture and equipments for Government Schools, Panchayat Union Schools, Adi Dravidar and Tribal Welfare Schools, Kallar Reclamation Schools, Noon Meal Centres, Anganwadis, Government Colleges, Government Students Hostels, Government Hospitals, Primary Health Centres and Government Veterinary Hospitals are permitted. Likewise, purchase of Tricycles, Mini Lorries, etc., for the purpose of solid waste management is permitted.

3) Any work in Government aided / Self-financing Schools, Colleges and other Government aided / Self-financing Educational Institutions.

4) All works involving commercial establishments / units.

5) Grants and Loans, contribution to any Central and State / UT Relief Funds.

6) Acquisition of land or any compensation for land acquired.

7) Reimbursement of any type of completed or partly completed works or items.

8) Assets yielding benefits for individual / family / any Institutions.

9) All Revenue and Recurring Expenditure.

10) Works within the places of religious worship and on land belonging to or owned by religious faiths / groups.

11) Desilting of Ponds, Ooranies, Rivers, Tanks, Canals, Channels and other such Water Bodies.

**Exception:**

(i) Desiltation, consolidation of bunds and constructions / renovation of sluices / surplus weirs etc., of PWD tanks only, if found essential in the opinion of the District Collectors can be taken up. However, the public contribution should not be less than 50% of the estimate prepared by PWD. The upstream / downstream supply channels may be taken up under Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme (MGNREGS) / IAMWARM wherever applicable. Tamil Nadu Transparency in Tenders Act, 1998 and Rules issued there under should be followed while executing these works.

12) Gravel / WBM roads (roads upto BT standard only should be taken up).

## 7. Execution of Works

(i) Administrative sanction should be accorded only after preparation of the estimate by the Local Bodies or the Department concerned as per the schedule of rate approved by the competent authority or as per the latest schedule of rate of the Public Works Department. A minimum of one-third of the estimated cost of the work should be received by means of Demand Draft in favour of the District Collector to "Namakku Naame Thittam Account". The balance amount will be released by Government from the Namakku Naame Thittam Fund. Further, if the guidelines of other schemes of the Central and the State are in tune with this scheme, the funds of those schemes may also be dovetailed with the public contribution.

(ii) The work in which 1/3 contribution is received shall be executed through tender system as per the Tamil Nadu Transparency in Tenders Act 1998 and Rules issued there under and provisions made in the Tamil Nadu Panchayats (Preparation of Plans, Estimate of works and mode and conditions of contracts) Rules, 2007 regarding Administrative Sanction, Technical Sanction, Tendering and Measurement of works issued vide G.O. (Ms).No.203, RD&PR (PR.1) Department, dated: 20.12.2007,G.O. (Ms) No.54, RD & PR (PR.1) Department, dated: 22.05.2014 and G.O. (Ms) No.111, RD & PR (PR.1) Department, dated: 21.08.2018.

(iii) (a) To facilitate larger participation of the people in this scheme, if the public or contributors opt to execute the work themselves or through their agency and if the public contribution is 50% or more of the estimate of the value of the work, willingness should be given by them in writing while applying for the work under Namakku Naame Thittam. The District Collector will examine the request and permit the contributors or the agency to execute the work without tender, after assessing the contributor's technical and financial capability to execute the project.

(b) But in case of desiltation of PWD tanks even if the public contribution is 50% or more, the work should be executed only through tender as per Tamil Nadu Transparency in Tenders Act, 1998 and Rules issued there under.

(c) If the agency / institution does not come forward to execute the work, the work shall be implemented through tender as per the provisions of the Tamil Nadu Transparency in Tenders Act, 1998 and Rules issued there under.

(iv) The District Collector will decide the Technical Authority for supervision of the work. The agency may be the Local Body or the Department concerned. The District Collector will release the required funds to the Agency concerned.

(v) (a) The District Collector will select an implementing agency. The work order will be issued to the implementing agency like Local Body Line Department / Contributor / Private Institutions or the person from any one of the above agencies executing the work.

(b) Even though the works are executed by the Private Bodies / Associations or the Public, the funds will be at the disposal of the Local Body / Department concerned supervising the work.

(c) The bills will be sanctioned as per the measurement and check measurement by the Competent Technical Authority and as per the Guidelines.

(d) In case of School Buildings including the High School / Higher Secondary Schools in rural areas, in addition to the supervision as above, the Public Works Department or the Technical wing of the Executing Department should issue the structural stability certificate. The Technical wing shall prepare the completion report for the building work.

(vi) In respect of works taken up with 100% public contribution, if the beneficiary association / contributors concerned express willingness to execute the work themselves, work can be entrusted to them without insisting on the advance cash contribution under Namakku Naame Thittam. However, the work should be executed as per the type design and stability aspect of the building subject to the measurement of the work.

(vii) In respect of construction of Compound Walls and other common facilities in the Burial Grounds belonging to Public Wakfs in rural areas, registered with the Tamil Nadu Wakfs Board, since the Tamil Nadu Wakfs Board does not have any Engineering wing, this work may be entrusted to Local Bodies concerned.

## 8. Maintenance of assets created under Namakku Naame Thittam

It is preferable that the Local Body or the Department themselves maintain the works / assets created under Namakku Naame Thittam. In order to continuously maintain the assets created under this scheme, the local people should form a User Group run on Self-generated resources. The local people should be encouraged to plan, execute and maintain the works based on local needs.

## 9. Fund allocation and Release of Funds:

i. An amount of Rs.100 Crore is sanctioned for the implementation of Namakku Naame Thittam during the year 2021-2022.

ii. Works can also be taken up in rural areas from interest accrued in the District Collector's Namakku Naame Thittam account.

iii. Out of the total sanctioned amount of Rs. 100 Crore, 74% will be allocated to the Districts based on population. The Director of Rural Development and Panchayat Raj should release this amount in two or more installments to the Districts based on the Physical and Financial progress of works and the District Collectors should release the funds on priority basis of works, from the funds released to the Districts.

iv. 1% of the total allocation shall be earmarked for Information Education and Communication (IEC) activities. Out of this, 10% shall be allocated for IEC activities at the Directorate of Rural Development and Panchayat Raj and the balance amount shall be allotted to the Districts.

v. The balance 25% of the total allocation will be earmarked for sanction of special works in rural areas by the Director of Rural Development and Panchayat Raj based on the request by the District Collectors.

a) If additional funds are required by the Districts to take up Special Works in rural areas under Namakku Naame Thittam, proposals for such works shall be sent to the Director of Rural Development and Panchayat Raj. Before sending such proposals, the entire amount already allotted to the District should have been sanctioned.

b) If required, the Director of Rural Development and Panchayat Raj may re-allot the unutilized funds available with the Districts as on 31st December to those Districts with better performance and requiring additional funds for implementation of works.

vi. (a) The funds received from Government and the public shall be deposited in a Savings Bank Account in a Nationalized Bank opened for Namakku Naame Thittam.

(b) All Contributions received by the District Collectors should be by means of Demand Draft in the name of District Collector's Namakku Naame Thittam Account. Acknowledgement must be given for all contributions received.

(c) A register should be maintained for the contributions received. The accounts and the register should be maintained by the Project Director, District Rural Development Agency.

(d) The District Collector shall release 75% of the funds including the public contribution to the Local Body / Line Department concerned, along with Administrative Sanction. The remaining amount should be released only after the receipt of utilization certificate.

vii. In case of the work proposed not being taken up for various reasons, the District Collector will order the refund of the entire amount or part amount in accordance with the quantum and value of the work undertaken. In such cases, the contribution amount will be refunded to the contributor in full or in part without any interest.

**10. Information, Education and Communication (IEC)**

The District Collector should take steps for communication and publicity of the salient features and success stories of Namakku Naame Thittam through the local Newspapers.

The Principal Secretary to Government, Rural Development and Panchayat Raj Department is empowered to modify the Guidelines of Namakku Naame Thittam, whenever necessary, in consultation with the Director of Rural Development and Panchayat Raj.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**P.AMUDHA**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**// FORWARDED BY ORDER //**

14-12-2021
Section Officer

<u>அரசாணை (நிலை) எண்.147, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.1) துறை, நாள் 14.12.2021</u>

<u>இணைப்பு</u>

<u>2021-2022-ஆம் ஆண்டிற்கான "நமக்கு நாமே திட்டம்" செயல்பாட்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் (ஊரகப் பகுதிகளில் மட்டும்)</u>

1. <u>முன்னுரை</u>

மக்களின் சுய உதவி, சுயசார்பு எண்ணம் ஆகியவற்றை வலிமைப்படுத்தவும், பரவலாக்கவும், மக்கள் பங்கேற்புடன் கூடிய நமக்கு நாமே திட்டத்தினை மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1997-1998-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தார்கள். இத்திட்டம் மக்களை வளர்ச்சிப் பணிகளில் திட்டமிடுதலில் தொடங்கி வள ஆதாரங்களை திரட்டுதல், பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் வரை நேரடியாக ஈடுபடுத்தியது. மாநில அரசின் நிதி ஆதரவும், தொழில் நுட்ப ஆதரவும் மக்களுடைய செயல்பாடுகளுக்கு உறுதுணையாக அமைந்தது. நமக்கு நாமே திட்டம் மக்களுடைய இன்றியமையாத சமூக தேவைகளை நிறைவேற்றுவதற்கு உரிய வழிவகுத்தது.

நமக்கு நாமே திட்டம் 1997-1998-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, 2000-2001-ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2001-2002-ஆம் ஆண்டு கிராமத் தன்னிறைவுத் திட்டமென்ற பெயரில் செயல்படுத்தப்பட்டது. 17.07.2002-ல் தன்னிறைவுத் திட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு 2005-2006-ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. மேலும், 2007-2008-ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டம் என புதுப்பிக்கப்பட்டு 2010-2011-ஆம் ஆண்டு முடிய தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. மீண்டும் 2021-2022-ஆம் ஆண்டு முதல் நமக்கு நாமே திட்டம் கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளுடன் ஊரகப் பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்படும்.

2. <u>பொதுமக்கள் பங்களிப்பு:</u>

கண்டறியப்படும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல் பொது மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

3. <u>'நமக்கு நாமே திட்டத்தின்' கீழ் பணிகளைத் தேர்வு செய்வதற்கான நடைமுறைகள் :</u>

i) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை எடுத்துச் செய்வதற்கான தேவை சமுதாயத்திலிருந்து தொடங்கப்பட வேண்டும். 'சமுதாயம்' என்பது தனிநபர், குழுக்கள், பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் மற்றும் அறக்கட்டளைகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகும்.

ii) எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பணியினைக் குறிப்பிட்டு பொது மக்களின் பங்களிப்பான மூன்றில் ஒரு பங்கு தொகையை வழங்க சம்மதம் தெரிவித்து விண்ணப்பப் படிவம் ஒன்று கோரிக்கை வடிவில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்கப்பட வேண்டும்.

iii) எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பணிகள் ஊரகப் பகுதிகளில் மட்டும் இருக்கவேண்டும்.

iv) மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி உறுதி செய்வார். அவ்விதிமுறைகள் திருப்தி அளிக்கும்பட்சத்தில் திட்டப் பணியினை செயல்படுத்தும் முகமையிடம் விளக்கமான மதிப்பீட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் கோருவார். அனுமதி வழங்க ஏதுவாக விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய உரிய தொகைக்கான கேட்பு வரைவோலையை மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரிடம் செலுத்த வேண்டும்.

v) உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

vi) இத்திட்டத்தின் கீழ், மாநில பொதுத் துறை நிறுவனங்களின் (SPSUs) நிறுவன சமூகப் பொறுப்பு (Corporate Social Responsibility) நிதியை, பொது பங்களிப்பாக ஏற்றுக்கொள்ள இயலாது.

vii) பணிகளைச் செய்வதற்கு உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்மந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில் அதற்கான அனுமதியை, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன், மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.

viii) உருவாக்கப்படும் சொத்துக்கள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் பராமரிப்பின் கீழ் இருக்க வேண்டியிருப்பின், அச்சொத்துக்களை உருவாக்க சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு / துறையின் ஒப்புதலை மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.

ix) இத்திட்டத்தின் கீழ் குறைவாக நிதி இருக்கும்பட்சத்தில், பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின், அவற்றுள் மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

(x) மாநில அளவில் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்களுக்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அதற்கான பங்களிப்பை தனியார் அல்லது பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து (மாநில பொதுத் துறை நிறுவனங்களின் கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதி நீங்கலாக) பெறலாம்.

4. <u>ஊரகப் பகுதிகளில் மட்டும் எடுத்துச் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட பணிகளின் பட்டியல்:</u>

கீழ்க்காணும் பணிகள் 2021–2022–ஆம் ஆண்டு ஊரகப் பகுதிகளில் மட்டும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படலாம்:–

i) அரசுப் பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டடங்கள், நவீன வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள் கட்டுதல், மிதி வண்டி நிறுத்துமிடம் மற்றும் சுற்றுச்சுவர் / சுற்று வேலி அமைத்தல். அரசுப் பள்ளிகளில் பாதி திறந்த வெளிக்கூரை அமைப்பிலான கூடாரம் கட்டுதல். அரசுப் பள்ளிகள், தொழில்நுட்ப பட்டயக் கல்லூரிகள் மற்றும் அரசுக் கல்லூரிகளில் உள்விளையாட்டரங்கம் அமைத்தல்.

ii) சமுதாயக் கூடம் கட்டுதல் (சமையற்கூடம் மற்றும் உணவருந்தும் அறையும் சேர்ந்து) அல்லது ஏற்கனவே கட்டப்பட்ட சமுதாயக் கூடங்களில் சமையலறை மற்றும் உணவருந்தும் அறை கட்டுதல்.

iii) அரசால் நடத்தப்படும் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் கட்டுதல்.

iv) ஊரக மற்றும் நகர்ப்புறங்களுக்கு அருகில் உள்ள ஊரக பகுதிகளின் முக்கியப் பொது இடங்களில் மற்றும் சந்திப்புகளில் ஆற்றல் மிக்க விளக்குடன் சிறு கோபுர மின்விளக்குகள் அமைத்தல்.

v) தகன மேடைகளில் வாயுவாக்கி அமைத்தல் (Gassifier)

vi) அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பூப்பந்து மற்றும் கூடைப்பந்து தளம் அமைத்தல்.

vii) அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை வளர்ப்பு மையங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல் மற்றும் சுற்றுச்சுவர் / சுற்று வேலி அமைத்தல். தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட பொது இஸ்லாமிய அறக்கட்டளைக்கு (Public Wakf) சொந்தமான ஊரக பகுதிகளில் அமைந்துள்ள இடுகாடுகள் உட்பட இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் இதர பொது வசதிகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளையும் எடுத்துக்கொள்ளலாம்.

viii) ஊரகப் பகுதிகளில் நூலகங்கள் கட்டுதல் மற்றும் ஊரக பகுதிகளில் சத்துணவு மையங்கள், அங்கன்வாடிகள், பள்ளி சமையல் கூடங்கள் மற்றும் பொது விநியோகக் கடைகள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல். நூலக கட்டடங்களுக்கான பணிகளை மேற்கொள்ளும்போது புத்தகங்கள் வாங்குவதற்கு தேவையான நிதி பங்களிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

ix) ஊரக பகுதிகளில் சமுதாய கட்டடங்கள், குடிநீர் வழங்குதல், சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் மற்றும் கதிரடிக்கும் களங்கள் போன்ற சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல்.

x) பாலங்கள், சிறிய பாலங்கள் கட்டுதல், சரளை /கப்பிச் சாலைகளை தார் சாலைகளாக தரம் உயர்த்துதல், பழுதடைந்த தார்சாலைகளை புதுப்பித்தல், தெருக்கள் மற்றும் சிறிய சந்துக்களை பேவிங் கற்கள், பேவர்பிளாக் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் மூலம் மேம்படுத்துதல்.

xi) பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலை திட்டு (Traffic Island) மற்றும் நீரூற்று (Fountain) போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

xii) அரசுப் பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நூலகங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிலுள்ள கட்டடங்களுக்கு தேவையான அறைகலன்கள், கணினிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குதல். பழைய கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கக்கூடாது.

xiii) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை தொடர்பான பணிகள் மற்றும் சுற்றுச்சூழல் சுகாதாரம் தொடர்பான மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல்.

xiv) உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் மற்றும் அவற்றிக்கான உபகரணங்கள் வாங்குதல். இவை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் சொத்தாகக் கருதப்படும்.

5. <u>வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள்:</u>

பரிந்துரைக்கப்பட்ட பட்டியலில் உள்ள அனுமதிக்கப்படக் கூடிய பணிகளைக் கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கொள்ளலாம்:–

i) சொத்தின் உரிமைதாரரின் முன் அனுமதி பெறாமல் எந்த நிரந்தர கட்டடங்களும் கட்டக்கூடாது.

ii) பணிக்கான பங்களிப்பை அளிக்க முன்வரும் நபர் / நிறுவனம் (Contributing person / Entity) சொத்திலோ அல்லது அதன் பயன்பாட்டிலோ / சொத்தினை பராமரிப்பதிலோ எந்த உரிமையும் கோர முடியாது.

iii) பணிக்கான பங்களிப்பு நிதி வழங்கியவர்களின் பெயர்களை, மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதி பெற்று, பணி நடைபெறும் இடத்தில் பெயர்ப் பலகை மூலம் காட்சிக்கு வைக்கலாம். பெயர்ப் பலகையில் மூன்றில் இரண்டு பகுதிக்கு குறையாத அளவில் "நமக்கு நாமே திட்டம் " என்று தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். பணி மேற்கொள்ளப்படும் கட்டடம்/இடத்தின் கலைநயத்திற்கு குந்தகம் ஏற்படாத வகையில், பங்களித்தோர் பெயர்ப் பலகை வைக்க அனுமதிக்கலாம். ஆனால் பங்களித்தோர் அந்த சொத்தின் மீது உரிமையோ / குத்தகைக்கு உரிமையோ / பயன்பாட்டு உரிமையோ அல்லது பராமரிப்பு உரிமையோ கோரக் கூடாது.

iv) திட்டப் பணிக்கு பங்களித்தோர் போதுமான அக்கறை காட்டவில்லை அல்லது ஏதாவது நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கருதினால், பணியைச் செய்ய அல்லது பராமரிக்க வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்பட்டு அப்பணி தொடர அனுமதி மறுக்கப்படும்.

6. <u>எதிர்மறையான பட்டியல் /தடை செய்யப்பட்ட பணிகள்:</u>

விதிவிலக்காக எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர, கீழ்க்காணும் தடை செய்யப்பட்ட பணிகள் பட்டியலில் இடம்பெற்ற பணிகளை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய இயலாது.

1) பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் உள்பட மத்திய மற்றும் மாநில அரசு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல்.

<u>விதிவிலக்கு:</u>

i) எனினும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் / அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கான குடியிருப்பு கட்டடங்கள் கட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல், அனைத்து வகையான அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல், பொது விநியோகக் கடைகள் கட்டுதல், நேரடி கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள் மற்றும் மொத்த குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல் ஆகியவற்றை எடுத்துச் செய்யலாம்.

2) அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வாங்குதல்.

விதிவிலக்கு:

(i) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், சத்துணவு மையங்கள், அங்கன்வாடிகள், அரசுக் கல்லூரிகள், அரசு மாணவ – மாணவியர் தங்கும் விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல் அனுமதிக்கப்படுகிறது. அதேபோல் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக மூன்று சக்கர மிதிவண்டி, சிறு லாரிகள் போன்ற வாகனங்கள் வாங்கலாம்.

3) அரசு உதவி பெறும் / சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மற்றும் அரசு உதவிபெறும் / சுயநிதி கல்வி நிறுவனங்களுக்கு எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

4) அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் சார்ந்த பணிகள்.

5) மானியம் மற்றும் கடன், மத்திய மற்றும் மாநில / யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

6) நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

7) முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகையினை மீளச் செலுத்துதல்.

8) தனிநபர் / குடும்பம் / நிறுவனங்களின் நலனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

9) அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

10) மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

11) குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள் மற்றும் அதைப் போன்ற நீர்நிலைகளை தூர் வாருதல்.

விதிவிலக்கு:

1) மாவட்ட ஆட்சித் தலைவர் அவசியம் எனக் கருதினால் பொதுப்பணித் துறை கண்மாய்களை மட்டும் தூர் வாருதல், கரைகளை பலப்படுத்துதல் மற்றும் மதகு / அணைகளைக் கட்டுதல்/ சீரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். இதில் மக்கள் பங்களிப்புத் தொகை பொதுப்பணித் துறையினரால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டிற்கு 50 சதவிகிதத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும். தேவையின் அடிப்படையில் நீர் வரத்து கால்வாய் மற்றும் உபரிநீர் கால்வாய் ஆகியவற்றிற்கான பணிகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS) / நீர்வள நிலவளத்

(IAMWARM) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம். மேற்காணும் பணியினை செயல்படுத்தும்போது தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட விதிகளில் உள்ள நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

12) சரளை/கப்பிச் சாலைகள் (தார்சாலை நிலை வரை அமைக்கும் சாலைப் பணிகளை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்).

7) <u>பணிகளை நிறைவேற்றுதல்:</u>

i) பணியை மேற்கொள்ளவிருக்கும் உள்ளாட்சி அமைப்போ அல்லது சம்மந்தப்பட்ட துறையோ தகுதி வாய்ந்த அலுவலரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அட்டவணையிட்ட விலைப்பட்டியலின் அடிப்படையிலோ அல்லது பொதுப்பணித் துறையால் சமீபத்திய அட்டவணையிட்ட விலைப்புள்ளி பட்டியலின் அடிப்படையிலோ, பணிக்கான மதிப்பீட்டைத் தயாரித்து அளித்த பிறகே நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பங்கு தொகை கேட்பு வரைவோலை மூலம் "மாவட்ட ஆட்சித் தலைவரின் நமக்கு நாமே திட்ட கணக்கு" என்ற பெயரில் பெறப்பட வேண்டும். மீதமுள்ள தொகை, அரசின் நமக்கு நாமே திட்ட நிதியிலிருந்து விடுவிக்கப்படும். மேலும், மத்திய மற்றும் மாநில அரசின் இதர திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகள், இத்திட்டத்திற்கு இசைவாக இருந்தால் அத்திட்டங்களின் நிதியும், பொது மக்களின் பங்களிப்பு நிதியுடன் ஒருங்கிணைக்கப்படும்.

ii) பொது மக்கள் பங்குத்தொகை மூன்றில் ஒரு பங்கு, பெறப்பட்டு பணிகள் யாவும், 1998-ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட விதிகள் படியும், தமிழ்நாடு ஊராட்சிகள் (வேலையின் வரைபடம் தயாரித்தல் மற்றும் வேலையின் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மாதிரி ஒப்பந்த நிபந்தனைகள்) விதிகள் 2007 மற்றும் பின்வரும் அரசாணைகளில், நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, ஒப்பந்த நடைமுறை மற்றும் பணிகள் அளவீடுகள் தொடர்பாக தெரிவித்துள்ள வழிவகைகளை பின்பற்றி செயல்படுத்தப்பட வேண்டும்.

(அ) அரசாணை (நிலை) எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா-1) துறை, நாள்.20.12.2007.

(ஆ) அரசாணை (நிலை) எண்.54, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா-1) துறை, நாள்.22.05.2014.

(இ) அரசாணை (நிலை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா-1) துறை, நாள்.21.08.2018.

iii) a) பொதுமக்கள் இத்திட்டத்தில் பெரிய அளவில் பங்கேற்க ஏதுவாக, பொது மக்களோ அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவர்களோ, மேற்கண்ட பணியை தாங்களாகவோ அல்லது அவர்களின் முகவர்கள் மூலமாகவோ செய்திட விரும்பினால், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யும்போது எழுத்து பூர்வமாக தெரிவிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த கோரிக்கையை ஆய்வு செய்து, அப்பணியின் மதிப்பீட்டில் பொது மக்களின் பங்களிப்பு மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால், பங்களிப்போரின் தொழில்நுட்ப மற்றும் நிதித் திறனை மாவட்ட ஆட்சித் தலைவர் மதிப்பீடு செய்து, ஒப்பந்தப்புள்ளியின்றி பங்களித்தவரையோ அல்லது அவரின் முகவரையோ, அப்பணியை செயல்படுத்த அனுமதி வழங்கலாம்.

b) ஆனால், பொதுப்பணித் துறையின் குளங்களை தூர்வாரும் பணிகளில் பொதுமக்களின் பங்களிப்புத் தொகை 50 சதவீதத்திற்கு மேல் இருப்பினும் அப்பணிகள் யாவும் 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட, விதிகளின் படியும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

c) பணிக்கான பொதுப் பங்களிப்பை அளித்த முகமை / நிறுவனம் தானே பணியை நிறைவேற்ற முன்வரவில்லை என்றால், அப்பணிகள், 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட விதிகளின் வழிவகைகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.

iv) பணிகள் மேற்பார்வையிடுவதற்கான தொழில்நுட்ப அமைப்பை (Technical authority) மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்வார். அந்த முகமையானது உள்ளாட்சி அமைப்பாகவோ அல்லது தொடர்புடைய துறையாகவோ இருக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் தேவைப்படும் நிதியை இம்முகமைக்கு விடுவிப்பார்.

v) a) மாவட்ட ஆட்சித் தலைவர் பணியினை செயல்படுத்தும் நிறுவனத்தை தேர்வு செய்வார். உள்ளாட்சி அமைப்புக்கோ / தொடர்புடைய துறைக்கோ (Line Department)/ பங்களித்தவருக்கோ / தனியார் நிறுவனங்களுக்கோ அல்லது மேற்கூறிய நிறுவனங்கள் ஏதாவது ஒன்றின் மூலம் பணியை மேற்கொள்ளும் தனியருக்கோ பணி நிறைவேற்றல் ஆணை வழங்கப்படும்.

b) பணிகளை நிறைவேற்றுவது, தனியார் அமைப்பாகவோ / குழுமங்களாகவோ அல்லது பொதுமக்களாகவோ இருந்தாலும், இப்பணியை செயற்படுத்தும் / கண்காணிக்கும் உள்ளாட்சி அமைப்புகள் / சம்மந்தப்பட்ட துறையிடம் மட்டுமே இதற்கான நிதி இருக்கும்.

c) அளவு மற்றும் அளவு சரிபார்த்தல் போன்றவை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அமைப்பால் சரிபார்க்கப்பட்டு, வழிகாட்டு நெறிமுறைகளின்படியே பட்டியல்கள் ஒப்பளிப்பு செய்யப்படும்.

d) உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளிகள் உள்ளிட்ட பள்ளிக்கூட கட்டடங்களைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட பொதுப்பணித் துறை அல்லது மாநகராட்சி அல்லது நகராட்சி அல்லது செயற்படுத்தும் துறையின் தொழில்நுட்ப குழு ஆகியன மேற்கண்ட பணி குறித்த கண்காணிப்புத் தவிர, கட்டடத்திற்கான கட்டுமான ஸ்திரத்தன்மை குறித்து சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். கட்டடப் பணிக்கான பணி நிறைவு அறிக்கையை தொழில் நுட்பக்குழு தயார் செய்ய வேண்டும்.

vi) 100 விழுக்காடு மக்கள் பங்களிப்புடன் பணியை மேற்கொள்ளும் இனங்களில் சம்பந்தப்பட்ட பயனாளி குழுமங்கள் / பங்களிப்பு அளித்தவர்கள் தாங்களே பணியை நிறைவேற்றுவதற்கு விருப்பம் தெரிவித்தால், நமக்கு நாமே திட்டத்தின்படி செலுத்த வேண்டிய முன்பண பங்களிப்பு தொகையை செலுத்துமாறு வலியுறுத்தாமல் பணியை நிறைவேற்ற அவர்களிடம் ஒப்படைக்கலாம். எனினும், பணியானது கட்டட வடிவமைப்பு மற்றும் கட்டட உறுதித் தன்மைகளுக்கு ஏற்ப பணி அளவுகள் சரிபார்க்கப்படுவதற்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

vii) தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட பொது இஸ்லாமிய அறக்கட்டளைக்கு (Public Wakfs) ஊரகப் பகுதிகளில் சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் மற்றும் இதர வசதிகள் அமைக்கும் பணிகளை, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கென தனியே, பொறியியல் பிரிவு ஏதும் இல்லாததால், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக பணிகள் மேற்கொள்ளலாம்.

8) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களை பராமரித்தல்.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பணிகளை / சொத்துக்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அல்லது சம்பந்தப்பட்ட துறையோ பராமரித்து வருவது மிகவும் விரும்பத்தக்கது ஆகும். எனவே சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் உதவியுடன் இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களை தொடர்ந்து பராமரித்து வருவதற்காக, சுயமாக நிதிபெற்று செயல்படும் ஒரு பயனாளிகள் குழுவை உள்ளூர் மக்கள் அமைக்க

வேண்டும். உள்ளூர் தேவைக்கேற்ப திட்டமிட்டு, பணிகளை செயல்படுத்தி பின்னர் பராமரித்து வருவதற்கு உள்ளூர் மக்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

9) <u>நிதி ஒதுக்கீடு மற்றும் நிதி விடுவித்தல்</u>

i) 2021–2022–ஆம் ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தினை செயல்படுத்த ரூ.100.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ii) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பெறப்பட்ட பொது மக்கள் பங்குத் தொகையிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்தும் இத்திட்டப் பணிகளை எடுத்துச் செய்யலாம்.

iii) மொத்த ஒதுக்கீடான ரூ.100.00 கோடியில், 74 விழுக்காடு அனைத்து மாவட்டங்களுக்கும் மக்கள் தொகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும். இத்தொகை பணிகளின் செயல்திறன் மற்றும் நிதித்திறன் முன்னேற்றத்தின் அடிப்படையில் மாவட்டங்களுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் விடுவிக்கப்படும். மேலும், மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதியை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஊரகங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்க வேண்டும்.

iv) மொத்த ஒதுக்கீட்டில் 1 விழுக்காடு செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மேற்படி தொகையில் 10 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திற்கு செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மீதமுள்ள தொகை மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

v) மொத்த ஒதுக்கீட்டில் மீதமுள்ள 25 விழுக்காடு, மாவட்ட ஆட்சித் தலைவரால் கோரப்படும் சிறப்பு பணிகளை செயல்படுத்த அனுமதி வழங்கும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

a) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஊரக பகுதிகளில் சிறப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாவட்டத்திற்கு கூடுதல் நிதி தேவைப்படின், அத்தகைய திட்டங்கள் குறித்த கோரிக்கைகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அனுப்பவேண்டும். இத்தகைய கருத்துருவினை அனுப்பும் முன், மாவட்டத்திற்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு முதலில் முழுமையாக நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

b) தேவைப்படின், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால், டிசம்பர் 31–ஆம் தேதி அன்று உள்ள நிலவரப்படி, மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் உள்ள தொகையை, திட்ட செயல்பாடுகள் நன்றாக உள்ள மற்றும் கூடுதல் நிதி தேவைப்படும் மாவட்டங்களுக்கு மறு ஒதுக்கீடு செய்து வழங்கப்படும்.

vi) a) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசு மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் நிதி தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் நமக்கு நாமே திட்டத்திற்காக தொடங்கப்பட்ட சேமிப்பு கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்.

b) மாவட்ட ஆட்சித் தலைவரால் பெறப்படும் அனைத்து பங்களிப்புகளும் "மாவட்ட ஆட்சித் தலைவரின் நமக்கு நாமே திட்டக் கணக்கு" என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலையாக இருக்க வேண்டும். பெறப்பட்ட எல்லா பங்களிப்புகளுக்கும் ஒப்புகை வழங்கப்பட வேண்டும்.

c) பெறப்படும் பங்களிப்புக்காக ஒரு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். இந்த கணக்குகளையும், பதிவேட்டையும், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் பராமரித்து வர வேண்டும்.

d) நிர்வாக அனுமதி வழங்கும்போதே பொதுமக்கள் பங்களிப்புத் தொகை உட்பட 75 விழுக்காட்டு தொகையை உள்ளாட்சி அமைப்பு மற்றும் தொடர்புடைய துறைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் விடுவிக்கலாம். மீதமுள்ள தொகையை பயன்பாட்டு சான்றிதழ் (Utilisation Certificate) பெற்ற பிறகுதான் விடுவிக்க வேண்டும்.

vii) உத்தேசிக்கப்பட்ட பணி பல்வேறு காரணங்களால் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இருந்தால், பெறப்பட்ட நன்கொடையின் முழு தொகையையோ அல்லது பகுதி தொகையையோ, நடைபெற்றுள்ள வேலை மற்றும் அதன் மதிப்புக்கு ஏற்ப, திருப்பி அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிடுவார். இது போன்ற நேர்வுகளில், பங்களிப்புத் தொகைக்கு வட்டி ஏதும் இன்றி தொகை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, பங்களிப்பு வழங்கியவருக்கு திருப்பி அளிக்கப்படும்.

10. தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC)

நமக்கு நாமே திட்டத்தின் சிறப்பு அம்சங்களையும் இத்திட்டத்தின் சாதனை பட்டியல்கள் குறித்தும் உள்ளூர் பத்திரிகை மூலம் வெளியிட தேவையான தொடர்பு மற்றும் விளம்பரங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்திடல் வேண்டும்.

தேவையின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருடன் கலந்தாலோசனை செய்து மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்கள் மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை/நகல்//

Kamatchi/14-12-2024
பிரிவு அலுவலர்